# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி: 2363 8282
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

**செய்தி வெளியீடு**

---

செய்தி வெளியீடு : 66 /2022 நாள்: 13.07.2022

## ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி தற்செயல் தேர்தல்கள் - 2022
## தேர்தல் முடிவுகள் விவரம்

தமிழ்நாட்டில் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் 30.04.2022 வரை ஏற்பட்ட காலியிடங்களான மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் 2, ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள் 20, கிராம ஊராட்சித் தலைவர்கள் 40 மற்றும் கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் 436 என மொத்தம் 498 ஊரக உள்ளாட்சி காலியிடப் பதவியிடங்களுக்கும், மாநகராட்சி வார்டு உறுப்பினர்கள் 2, நகராட்சி வார்டு உறுப்பினர்கள் 2 மற்றும் பேரூராட்சி வார்டு உறுப்பினர்கள் 8 என மொத்தம் 12 நகர்ப்புற உள்ளாட்சி காலியிடப் பதவியிடங்களுக்கும் 09.07.2022 அன்று தற்செயல் தேர்தல் நடத்துவதற்கான தேர்தல் அறிவிக்கைகள் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்டது.

அவற்றில், ஊரக உள்ளாட்சி அமைப்புகளில், 4 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர்கள், 6 கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் 292 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் பதவியிடங்களும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் ஒரு மாநகராட்சி வார்டு பதவியிடமும், (தஞ்சாவூர் மாநகராட்சி வார்டு எண். 8) போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும், தேனி மாவட்டம், பெரியகுளம் நகராட்சியின் வார்டு எண். 26 உறுப்பினர் பதவியிடத்திற்கான தேர்தல் வழக்கு காரணமாக ரத்து செய்யப்பட்டது.

ஊரக உள்ளாட்சி அமைப்புகளில், 3 கிராம ஊராட்சித் தலைவர்கள் மற்றும் 22 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் பதவியிடங்களுக்கும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில், சிவகங்கை மாவட்டம், கானாடுகாத்தான் பேரூராட்சி வார்டு எண். 8 உறுப்பினர் பதவியிடத்திற்கும் வேட்பு மனுக்கள் பெறப்படாததால் தேர்தல் நடைபெறவில்லை.

எஞ்சிய 2 மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர், 16 ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், 31 கிராம ஊராட்சி தலைவர் மற்றும் 122 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் என மொத்தம் 171 ஊரக உள்ளாட்சி பதவியிடங்களுக்கும் ஒரு மாநகராட்சி வார்டு உறுப்பினர், ஒரு நகராட்சி வார்டு உறுப்பினர் மற்றும் 7 பேரூராட்சி வார்டு உறுப்பினர் என மொத்தம் 9 நகர்ப்புற உள்ளாட்சி பதவியிடங்களுக்கும் ஆக மொத்தம் 180 உள்ளாட்சி பதவியிடங்களுக்கும் தற்செயல் தேர்தலுக்கான வாக்குப்பதிவு 09.07.2022 அன்று நடைபெற்றது.

பதிவான வாக்குகள், 12.07.2022 அன்று காலை 8.00 மணிக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 131 வாக்கு எண்ணும் மையங்களிலும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 9 வாக்கு எண்ணும் மையங்களிலும் துவங்கப்பட்டு தேர்தல் முடிவுகள் தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலர்களால் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன் விபரம் பின்வருமாறு :-

| பதவி | தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டது (போட்டியின்றி தேர்வு உட்பட) | |
|---|---|---|
| **ஊரகம்** | | |
| மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் | 2 | தி.மு.க - 2 |
| ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் | 20 | தி.மு.க - 14<br>சுயேட்சை - 5<br>இ.தே.காங்கிரஸ் -1 |
| கிராம ஊராட்சித் தலைவர் | 37 | கட்சி சார்பற்ற தேர்தல்கள் |
| கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் | 414 | |
| **மொத்தம்** | 473 | |
| **நகர்ப்புறம்** | | |
| மாநகராட்சி வார்டு உறுப்பினர் | 2 | தி.மு.க - 2 |
| நகராட்சி வார்டு உறுப்பினர் | 1 | தி.மு.க |
| பேரூராட்சி வார்டு உறுப்பினர் | 7 | தி.மு.க - 6<br>சுயேட்சை - 1 |
| **மொத்தம்** | 10 | |

ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் முடிவுகள் விவரம், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய இணையதள முகவரியான **https://tnsec.tn.nic.in-ல்** வெளியிடப்பட்டுள்ளது. 14.07.2022 முதல் மேற்படி பகுதிகளில் தேர்தல் நடத்தை விதிகள் முடிவுக்கு வருகின்றது என ஆணையம் தெரிவித்துள்ளது.

**(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)**

மக்கள் தொடர்பு அலுவலர்